புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜுன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# கொற்கை நாவலில் இடம்பெற்றுள்ள நெய்தல் திணையின் மரபுசார் அறிவுத்தொழிற்நுட்பத்திறன்கள்

கே. வருசக்கனி
முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
நாட்டுப்புறவியல் மற்றும் பண்பாட்டு ஆய்வுகள் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்

ஆய்வுச்சுருக்கம்

பண்டைத்தமிழர்களின் வாழ்வியல் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என ஐவகை நிலங்களால் பிரிக்கப்பட்டது. அவற்றுள் நெய்தல் நிலம் மிகவும் தொன்மை வாய்ந்தது. தமிழ் மன்னர்களாகிய மூவேந்தர்களில் பாண்டிய மன்னர்கள் நெய்தல் நிலத்தோடு குறியீட்டு ரீதியாக மிகுந்த தொடர்பு கொண்டவர்கள். தமது வழிபடு தெய்வங்களையும், அரச அடையாளங்களையும் நெய்தல் நில தொடர்போடு அமைத்துக்கொண்டனர். இவ்வாறு தமிழ்ச்சமூகத்தின் தொன்மைச் சமூகமான பரதவர், மீனவர், செம்படவர் என பல்வேறு பெயர்களில் அழைக்கப்படுகின்ற நெய்தல் திணை மாந்தர்களின் பண்பாடு, பழக்கவழக்கங்கள், வாழ்வியல் பற்றி சங்ககாலம் தொட்டு தற்போது வரை பல்வேறு இலக்கியப்பிரதிகள் பதிவு செய்துள்ளன. அந்த வகையில் எழுத்தாளர் ஜோ டி குரூஸ் எழுதிய கொற்கை நாவலில் இடம்பெற்றுள்ள நெய்தல் நில மக்களின் முத்துக்குளிப்பு, நீரோட்டத்தை கணித்தல், கடற்காற்றை கொண்டு தோணி செலுத்தும் விதம் போன்ற மரபுசார் அறிவியல் தொழிற்நுட்பங்கள் பற்றி இக்கட்டுரை விவாதிக்கின்றது.

## முன்னுரை

மீனவர்கள், பரதவர்கள், செம்படவர்கள் என பல்வேறு பெயர்களில் அழைக்கப்படும் தொன்மைச் சமூகமாக நெய்தல் திணையில் வாழ்ந்து வரும் மீனவர்கள் சமூகம் விளங்குகின்றது. சங்க காலம் தொட்டு இலக்கிய பிரதிகளிலும் தமிழ் சமூகத்தின் பண்பாட்டுக் கூறுகளிலும் தவிர்க்க முடியாத சமூகமாக மீனவர்கள் சமூகம் அமைந்துள்ளது. பண்பாட்டு, காலனிய படையெடுப்புகளை எதிர்கொள்வதிலும், சுனாமி, புயல் போன்ற இயற்கை பேரிடர்களை எதிர்கொள்வதிலும் முதன்மையானவர்களாக இந்த கடற்பழங்குடிகளாகிய மீனவர் சமூகம் விளங்குகின்றது. வாணிபத்திலும் ஆளுமையிலும் தமிழகத்தின் சிறப்புகளை உலகமெங்கும் பரவுவதற்கு அடிப்படையாக விளங்கியவை நெய்தல் திணையிலுள்ள துறைமுகங்கள் ஆகும். தமிழகத்தை ஆண்ட அரசுகளின் பொருளாதார வளங்களை நிர்ணயிக்கும் கேந்திரமாக நெய்தல் திணை விளங்கியது. எழுத்தாளர் ஜோ டி குரூஸ் எழுதிய கொற்கை எனும் நாவலில் இடம்பெற்றுள்ள நெய்தல் திணையில் வாழும் மக்களின் பாரம்பரிய அறிவுதொழிற்நுட்ப திறனை பற்றி இக்கட்டுரையில் விவாதிக்கப்பட்டுள்ளது.

ஜோடி குரூஸ் மே 17, 1963 திருநெல்வேலி மாவட்டம் உவரி எனும் கடற்கரை கிராமத்தில் பிறந்தார். முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக சரக்கு கப்பல் நிறுவனங்களில் தலைமை பொறுப்பில் பணியாற்றியுள்ளார். மீனவர்களின் வாவ்வியல் குறித்து 2004ல் ஆழி சூழ் உலகு எனும் நாவலையும், 2009ல் கொற்கை எனும் நாவலையும் எழுதியுள்ளார். கொற்கை எனும் நாவலுக்கு 2013ம் ஆண்டிற்கான சாகித்திய அகாடமி விருது வழங்கப்பட்டுள்ளது

பாரம்பரிய அறிவு:

பாரம்பரிய அறிவு என்பது பாரம்பரிய வாழ்வாதார தொழில்நுட்பங்களான வேட்டை, விவசாயத்திற்கான கருவிகள் மற்றும் நுட்பங்கள், சூழலியல் அறிவு, பாரம்பரிய மருத்துவம், வானியல் அறிவு, கைவினை திறன்கள் பற்றிய அறிவை உள்ளடக்கியது. வாழ்வாதாரத்திற்கும் உயிர்வாழ்வதற்கும் முக்கியமான இந்த வகையான அறிவு பொதுவாக அனுபவம் மற்றும் சுற்றுச்சூழலுடனான தொடர்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. பல சந்தர்ப்பங்களில், பாரம்பரிய அறிவு என்பது வாய்மொழி மரபாக பல தலைமுறைகளாக ஒருவரிடமிருந்து மற்றொருவருக்கு கடத்தப்படுகின்றது. பாரம்பரிய அறிவின் சில வடிவங்கள் கதைகள், இதிகாசங்கள், சடங்குகள், பாடல்கள் மற்றும், மொழிகள், பாடல்கள், நடனம், விளையாட்டுகள், புராணங்கள், வடிவமைப்புகள், மற்றும் கட்டிடக்கலை ஆகியவற்றில் வழியாக வெளிப்படுகின்றன. (Terri, 2018)

பாரம்பரிய அறிவு பொதுவாக ஒரு சமூகத்தை மற்றொரு சமூகத்திலிருந்து வேறுபடுத்துகிறது. சில சமூகங்களில், பாரம்பரிய அறிவு தனிப்பட்ட மற்றும் ஆன்மீக அர்த்தங்களை எடுத்துக்கொள்கிறது. பாரம்பரிய அறிவு ஒரு சமூகத்தின் நலன்களையும் பிரதிபலிக்கும். சில சமூகங்கள் உயிர்வாழ தங்கள் பாரம்பரிய அறிவை நம்பியுள்ளன. சுற்றுச்சூழல் பற்றிய பாரம்பரிய அறிவு, விலக்குகள், பழமொழிகள் மற்றும் அண்டவியல் அறிவு அமைப்புகள் போன்றவை பல்லுயிர் பாதுகாப்பிற்கான பாதுகாப்பு நெறிமுறைகளை வழங்கக்கூடும்.(Adom: 2018)

நெய்தல் திணையின் பாரம்பரிய அறிவு திறன்களாக கொற்கை நாவலில் இடம்பெற்றுள்ள கருத்துகளை இக்கட்டுரையில் காணலாம்.

தோணிகட்டுதல் பற்றிய அறிவுத்தொழிற்நுட்பங்கள்

தோணிகள் கட்டப்படும் விதம் குறித்து விவரிக்கும்போது தோணிகள் கட்டுமானத்தில் பலகைகள் அமைக்கப்படும் நீள அகலங்கள் குறித்தும் அதற்கான காரணங்கள் குறித்தும் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

*".... கமர் பலக தோணிய பொறுத்து கொஞ்சம் அகலமா இருக்கணும் இல்லியா. பாலத்துலயும் அடி வாங்கும், பாரமும் எடுக்காது"* (கொற்கை- ப 76)

தோணிகளின் அமைப்பை கொண்டு அவை எந்த பிராந்தியத்தை சேர்ந்தவை என்று கண்டறிவதை பற்றியும்

*"கடலூர் டிங்கிய ஒரு மாதிரியா உருட்டிகிட்டு நிக்கிம்.குஜராத்துல பாக்கிறமில்ல ஒரு எடத்த வுடாம அங்கங்க பலவயா அடிச்சி கொச கொசயின்னு வச்சிருப்பான்வ. நம்ம தோணிய அதும் கொற்க தோணி கெட்டுமானந்தாம் நீண்டு விரிஞ்சி சும்ம எவ்வி அன்னப் பறவ மாறியிருக்கும்."* (கொற்கை - ப 159)

தோணி கட்டுமானத்தில் பயன்படுத்தப்படும் மரங்கள் குறித்தும் மரங்களின் தன்மை, பலன்கள் குறித்தும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

*"..... நம்ம இப்ப புதுச வக்கிற தோணிக்கி ஏரா கட்ட எப்படி போட? கருமருது போடுலாமுன்னு பார்த்தம். சரி இலுப்பையே போடுலாம். தண்ணிக்கிள சும்ம இரும்பு மாறியில கெடக்கும். ஏரா, பிச்சல் கட்ட, அணியத்துக்கட்ட எல்லாமே இலுப்பயில போட்டுறுங்க. வங்கு கால்வளுக்கு நம்ம பாவூர் சத்துரத்துல மரம் பார்த்து போட்ருக்கம். அடப்பு பலகதாம் இப்ப பிரச்சனையே. தஞ்சாவூர் பக்கம் கொஞ்சம் ஆயினியும் வெந்தேக்கும் கெடக்குன்னாம் கந்தையா"* (கொற்கை- ப 174)

தோணிகள் கட்டுமானத்தில் உள்ள பலகைகளின் வகைகளையும் அவை பயன்படுத்தப்படும் விதம் குறித்தும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

*"ஏராவுக்கும் வங்கு கால்களுக்கும் மேல வாரதுதாம் பூதாரு பலவ, அதுக்கும் கீழ கோதாள, தண்ணி ஓடுறதுக்கு இனும உள்பலவ, போடுத, பொய்போடுத, அவுத்தியாலு, முண்டங்காலு இதுவ நடனும்"* (கொற்கை : ப 361)

நவீன காலங்களில் புதிதாக கட்டப்பட்ட தோணிகளை கடலில் இறக்க கிரேன் முதலிய இயந்திரங்கள் பயண்பாட்டுக்கு வந்துள்ளன. ஆனால் தொடக்ககாலத்தில் புதிதாக கட்டப்பட்ட தோணிகளை கடலில் இறக்க வாழைப்பழம் போன்றவற்றை மசகாக பயன்படுத்தி வந்ததை காணலாம்

*"இது ஏற்கனவே பெட்டியில ஏத்துனதுனால அப்புடியே உருட்டிகிட்டு போயிருவோம். பெட்டிக்கிள ஏத்தயில்லாட்டி ஏராக்கட்டைக்கிம் பட்டறைக்கிம் எடையில கிசுலு, வாழப்பழம், இதுவள பெசைஞ்சி தடவி பொறுப்புவள தட்டிவிடுவோம். அப்புடியே வழுக்கி கிட்டு தண்ணிக்கிள சாடும்" (கொற்கை: ப 362)*

தோணியின் அடிப்பாகம் அகலமாக இருந்தால் அதற்கேற்றவாறு தோணியின் மிதவை திறன் அதிகரிக்கும் எனும் மிதவை தத்துவத்தை நெய்தல் நில மக்கள் அறிந்திருந்ததை கீழ்கண்ட வரிகளின் மூலம் அறிந்துகொள்ளலாம்.

*"ரெஜினாவே ஒங்களுக்கு அகலம் இருவது அடிதான! இது அட்டி விரிஞ்சது அகலம் இருவத்தியஞ்சி அடி வரும். பறந்து விரிஞ்சிருக்காதால மெதப்பு அதியமாவே வரும்" (கொற்கை: ப 362)*

முத்துக்குளிப்பு பற்றிய அறிவுத்தொழிற்நுட்பங்கள்

நெய்தல் நிலத்தின் முக்கிய தொழில்களாக விளங்குபவை மீன் பிடித்தலும், முத்து குளித்தலாகும். முத்துகுளிப்பு தொழிலுக்கு பெயர்பெற்ற ஊராக முத்துநகர் என்ற தூத்துக்குடி விளங்கியது. சங்க காலத்தில் இருந்தே கொற்கை முத்துகள் புகழ்பெற்று விளங்கின. முத்துக்குளிப்பதற்கான சீதோஷ்ண நிலையாக கடல் நீரோட்டம் தெளிவாக இருந்தால் தான் முத்து சிப்பிகளை சேகரிக்க முடியும் என்பதை கீழ்கண்டவாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

*"காலையில பார்த்தியா தண்ணி சேரு போல நின்னிச்சு. நாலைஞ்சு நாளா சோநீவாடு தாம். நேத்து ராத்திரியும் சோநீவாடுதாம் பொறுத்து நின்னிச்சு. நாந்தாம் கரத்தெளிவு குடுக்கட்டுன்னு நிக்க சொன்னம்" (கொற்கை: ப187)*

முத்துச்சிப்பிகளை பக்குவப்படுத்தி முத்துக்களை தனியே பித்தெடுக்கும் முறை குறித்து பின்வருமாறு நாவலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

*"சிப்பிகள் இறந்து அழுகி வெடித்து நாற்றமெடுக்கும். பின் கடற்கரை பருமணலை அள்ளி உள்ளே போட்டு சுதேசிகள் பிசைவார்கள். அழுகிய சதைக்குள்ளிருந்து முத்துக்கள் வெளியே வரும்" (கொற்கை: ப 186)*

முத்துச் சிப்பிகளை சேகரிக்க செல்லும் முத்துகுளிப்பவர்கள் கடலின் ஆழத்திற்கு செல்வதற்கு எளிதாக "குழிக்கல்" எனும் கல்லை பயன்படுத்தி கடலின் ஆழத்திற்கு செல்வர் என்ற செய்தி நாவலில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

*"குழிக்கல்லை பிடித்தபடி தலைகீழாக பாய்ந்து பயணிக்கும் குழியாள் தரை தட்டியவுடன் கல்லை விட்டு விடுவான். கல்லை மளமளவென மேலிழுத்து வள்ளத்தில் வைத்து கவனம் தவறாமல் காத்திருக்க வேண்டும். குழியாட்கள் ஒவ்வொருவருக்கும் குறிப்பிட்ட நேரம் வரை மூச்சு நிற்கும்." (கொற்கை: ப 188)*

தோணி செலுத்துதல் தொடர்பான அறிவுத்தொழிற்நுட்பங்கள்

புதிதாக கடல் பயணம் மேற்கொள்பவர்களுக்கு கடல்வாந்தி எனப்படும் ஒவ்வாமை ஏற்படும். அதற்கு மருத்தாக நார்த்தங்காய் ஊறுகாய் பயன்படுத்தப்பட்டிருப்பதை கீழ்கண்டவாறு நாவல் பதிவு செய்கின்றது.

*"தடையில கொஞ்சம் நார்தங்கா ஊறுகா இருக்கு. தோணி ஏறிச்சாடிகிட்டு வரும்போது ஒருவேள முழிப்பு வந்து கொடல பொரட்டிகிட்டு வந்தா இந்த ஊறுகாய வாய்கிள வச்சி அதக்கிக்கிறுங்க" (கொற்கை: ப 140)*

கடற்பயணங்களின் போது கடலின் நீரோட்டத்தையும் கடற்காற்றையும் பொறுத்து தோணிகளையும் வள்ளங்களையும் செலுத்தும் முறைகள் குறித்து கீழ்கண்டவாறு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

*"முட்டந்தாண்டும்போதே கட கொஞ்சம் அலம்பித்தாம் கெடக்கும். கடலடிய நேரா அணியத்துல வாங்காத. அணியத்துக்கு ஏராக்கட்டையில பொறுக்கும். அணியத்து சென்னியில வாங்கு. அப்புடியே ஓடிரும். நல்லா வெலங்க இழுத்து ஓடு, பூதாவும் பார்க்கடல். மணப்பாட்டு மொனையிலயும் காத்தும் மாறும், கடலும் விரியும்." (கொற்கை: ப 303)*

*"காற்றடி காலங்களில் கடுசு இல்லாமல் வள்ளங்களில் தொழில் செய்ய முடியவில்லை. மலத்தி சாய்க்கும் காற்றில் வள்ளத்தை சீராக மிதக்க வைக்க காற்று வரும் திசையை நோக்கி வைக்கப்படும் மரக்கட்டை கடுசு. காற்றின் வேகம் கூட கூட கடுசும் ஈடு கொடுக்க வேண்டும்*

*இல்லாவிட்டால் வேகமாக மோதும் காற்று பாயை தள்ளி சாய்த்து வள்ளத்தை உருட்டிவிடும். இதற்காகவே வள்ளத்தில் கடுசில் வைக்க மண் மூடைகள் எடுத்து செல்வார்கள்." (கொற்கை: ப320)*

கடல் நீரோட்டம் தொடர்பான அறிவுத்தொழிற்நுட்பங்கள்

கடல் நீரோட்டம் தொடர்பான அறிவுத்திறன்களையும் கடல் நீர் ஏறுதண்ணீரா இறங்குதண்ணீரா என்பதை கண்டறியும் முறைகள் குறித்தும்,கடல்களில் நீர் மட்டம் கூடும், குறையும் காலங்கள் குறித்தும் நாவலில் பதிவு செய்யப்பட்டுள்ளன,

*"முந்தாம் நாளே வந்திருந்த ரெஜினாவின் ஏரா மல்லங்குளம் பார் தட்டிவிடக் கூடாது என்பதற்காக ஏறு தண்ணீருக்காக காத்திருந்து உள்ளே கொண்டு வந்து பாலத்தில் கட்டியிருந்தார் தண்டல் பொனிப்பாஸ்" (கொற்கை: ப 201)*

*"பிலிப்பு கையிலிருந்த சாம்பலுருண்டையை கீழே விட்டான். அது கீழே தோணியின் கமர் பலகையில் தட்டி உடைந்து உதிர்ந்தது. கீழே கடலில் விழுந்த சாம்பல் கரைந்து சடுதியில் பின்னோக்கி நகர்ந்தது. நீவாடு பொறுத்து நிக்கிது பாத்தியா? இந்த நீவாடு மாறுனாத்தாம் தோணி உருவிச்சாடும்." (கொற்கை: ப.303)*

*"பௌர்ணமி முடிஞ்சி எட்டானத்து அஷ்டமி. நவமி, தசமிலயும் தண்ணி கொறைவாத்தான இருக்கும். தண்டலுக்கு தெரியாதா ஏகாதசியிலருந்து தண்ணி கூடும். மல்லங்கொளத்துள ஒரு ஆசைக்கித்தான பொழைச்சிச்சு ஏறுதண்ணியின்னால சரியா போச்சு" (கொற்கை: ப 384)*

கடற்காற்று தொடர்பான அறிவுத்தொழிற்நுட்பங்கள்

காற்று வீசும் திசையை வைத்து காற்றின் வீரியத்தையும் கடல் நீரோட்டத்தின் மாறறத்தையும் கணிக்கும் முறைகள் பற்றி கீழ்கண்டவாறு விளக்கப்பட்டுள்ளது.

*"கொச்சிக்கிட்ட வரும்போது இதே காத்து நின்னுச்சின்னா இழுத்து ஓடிறும், காத்து வுழ்ந்திச்சின்னு வச்சுக்க காணாவுல ரெம்ப கவனமாயிருக்கனும்" (கொற்கை: ப 82)*

*"எய்யா காத்து ஒருவேள வுழுந்திற்றுன்னு வையி தன்பாயயும் கோசயும் தவுர மத்துவள சுருட்டி கெட்டிருங்க" (கொற்கை: ப 82)*

*"காத்து வுழுந்து வாரதயும் கட விரியிறதயும் பாத்தா எனக்கென்னவோ சோழவப் பொசல் எடுக்கும்போல தெரியித." (கொற்கை: ப 517)*

*"சோழவக்காற்று நேர் எதிரே இருந்தாலும் வந்த வேகத்துலயே திருப்பப்பட்டதால் ஆத்துவாய்க்குள் பாயாமல் வெலங்கு நோக்கி ஓடியது தோணி. சிறிது தூரம் ஓடியே காற்றையும் கடலையும் ஆற்றியவர்கள் காற்று அயர்வதற்காக காத்திருந்தார்கள். நடுச்சாமம் போல காற்று வுழுந்து கடலும் அமைய தோணியை திருப்பி கொழும்புத்துறை நோக்கி வந்தார்கள்" (கொற்கை: ப 519)*

முடிவுரை

கொற்கை நாவலில் இடம்பெற்றுள்ள மீனவ மக்களின் மரபு சார் அறிவியல் தொழிற்நுட்ப திறன்களை பற்றி இக்கட்டுரையில் விவாதிக்கப்பட்டுள்ளது. ஒரு சமூகத்தின் அறிவுக்களஞ்சியமானது அச்சமூக மக்களிடயே வழங்கப்பட்டு வரும் வாய்மொழிக்கதைகள், பழமொழிகள், கைவினை பொருட்கள், தொழில்கள், சடங்குகள் என அச்சமூகம் சார்ந்த பண்பாட்டுக்கூறுகளில் விரவிக்காணப்படுகின்றது. மீன்பிடித் தொழில்களில் நவீன முறைகள் வந்திருந்தாலும், வளர்ச்சியின் பெயரால் கடலின் புதல்வர்களை மீனவர்களை கடற்கரையை விட்டு அப்புறப்படுத்தினாலும், சென்னையிலிருந்து குமரிமுனை வரை நீண்டு கிடக்கும் நெய்தல் நிலங்களில் கிறிஸ்தவம், இஸ்லாமியம் என பன்மைத்துவ கலாச்சாரங்களை வாழ்வியலாக ஏற்று கொண்டிருந்தாலும் பொருளாதாரம் மற்றும் வாழ்வியல் முறைகளில் பெரிய மாற்றங்கள் இல்லாத எளிய மக்களாகிய கடற்பழங்குடி மக்களின் பாரம்பரிய அறிவுத்திறன்களை ஆவணப்படுத்துவது அவசியமாகும். ஏனெனில் இந்தியாவை ஒக்கி பேரிடர் தாக்கியபோது மீட்பு பணிகளுக்காக ரேடார் மற்றும் நவீன தகவல் தொடர்பு சாதனங்களை கொண்ட இந்திய கப்பற்படையும், ஹெலிகாப்டர்களையும் கொண்ட அரசாங்கம் கடலில் இறங்க தயங்கிய போது காற்றின் திசையையும் விண்மீன்களை வைத்தும் மீனவர்கள் துணிச்சலுடன் கடலில் இறங்கி மீட்பு பணிகளை செய்தனர். கேரள வெள்ளத்தின் போது கேரள அரசாங்கம் மீட்பு பணிகளுக்காக

மீனவர்களை பயன்படுத்தியது. எனவே மீனவ மக்களின் மரபுசார் அறிவுத்திறன்களை நவீன அறிவியல் முறைகளுடன் இணைத்துப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

துணைநூற்பட்டியல்


1. Janke, Terri; Sentina, Maiko, 2018, *Indigenous Knowledge: Issues for Protection and Management,* Commissioned by IP Australia & the Department of Industry, Innovation and Science. Commonwealth of Australia. *https://www.ipaustralia.gov.au/about-us/our-agency/our-research/indigenous-knowledge-initiatives*

2. Adom, Dickson, 2018, *Traditional Biodiversity Conservation Strategy As A Complement to the Existing Scientific Biodiversity Conservation Models in Ghana.* Environment and Natural Resources Research. *https://www.ccsenet.org/journal/index.php/enrr/article/view/75130*

3. ஜோ டி குரூஸ்., ஆர்.என்., 2009, கொற்கை, முதல் பதிப்பு, காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோவில்.

4. கேரள மழை 'ஹீரோக்கள்' - வெள்ளத்தில் தவிப்பவர்களை துணிவுடன் மீட்கும் மீனவர்கள், இந்து தமிழ் நாளிதழ், 20.08.2018, https://www.hindutamil.in/news/india/139423--2.html


********* ********* ********** ********* ********* ********** ********** **********